தினகரன்
0 3 JUN 2025
நாள்:

# பெருநகர சென்னை மாநகராட்சி
# வருவாய் துறை

**வ.து.ந.க.என்.எஸ்யூஎஸ்வி/1008-28/2025**

**சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள், 2015-ன் விதி 12 (1) இன்படியான**

## அறிவிக்கை

சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 2014 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறைப்படுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள், 2015-ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்படுத்த, 07.08.2023 நாளிட்ட அரசு ஆணை (4D) எண்.29, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC.2) துறையின் ஆணையின்படி, ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சாலையோர வியாபாரிகளுக்கான நகர விற்பனைக் குழு அமைக்கப்பட்டது.

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு, 25-02-2025 மற்றும் 02-04-2025 தேதியிட்ட W.P.Nos.14977 of 2024 மற்றும் தொகுதி வழக்குகளில், சென்னை நகரத்தில் அதிக எண்ணிக்கையிலான சாலைகள் / பகுதிகள் உள்ள நிலையில், விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட பகுதிகளாகவோ அல்லது விற்பனை செய்ய தடைசெய்யப்பட்ட பகுதிகளாகவோ ஒரு நகர விற்பனைக் குழுவினால் நிர்ணயம் செய்ய அதிக நாட்கள் ஆகும் என்பதால், மேற்படி சட்டத்தின் பிரிவு 22(1) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள நடைமுறையை எளிமைப்படுத்தவும், சென்னை மாநகராட்சி எல்லைக்குள் 15 மண்டலங்கள் இருப்பதால், **ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு நகர விற்பனைக் குழுவை அமைக்குமாறு அரசாங்கத்திற்கு உத்தரவிட்டது.**

மேற்கண்ட உத்தரவை நிறைவேற்றுவதற்காகவும், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறையின் 16.05.2025 நாளிட்ட அரசாணை (4D) எண்.23 இல் உள்ள அரசு உத்தரவின் தொடர்ச்சியாகவும், மற்றும் 28.05.2025 நாளிட்ட மன்றத் தீர்மானம் எண்.641/2025 இல் சம்பந்தப்பட்ட வட்டார துணை ஆணையரின் தலைவரின் கீழ் மண்டலத்திற்கு தலா ஒன்று என 15 நகர விற்பனைக் குழுக்களை அமைப்பதற்கான அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

**நகர விற்பனைக் குழு**

| வ. எண். | நகர விற்பனைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் | விவரங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தலைவர் | சம்மந்தப்பட்ட வட்டார துணை ஆணையர் | 1 |
| 2 | உள்ளாட்சி அமைப்பின் மருத்துவ அதிகாரி | மண்டல நல அலுவலர் | 1 |
| 3 | காவல்துறை அதிகாரிகள் போக்குவரத்து அதிகாரி உட்பட | காவல் துறை உதவி ஆணையர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) காவல் துறை உதவி ஆணையர் (போக்குவரத்து) | 2 |
| 4 | உள்ளாட்சி அமைப்பின் அதிகாரி | மண்டல செயற்பொறியாளர் (முதுநிலை) | 1 |
| 5 | சாலையோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | மேற்படி 2015 விதிகளின் விதி 12 மற்றும் 13 இன்படி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும். | 6 |
| 6 | வணிகர் சங்கங்களின் பிரதிநிதி | தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் சாலையோர வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 2015-ன் விதி 11 (3) இன்படி, "சாலையோர வியாபாரிகளிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைத் தவிர, நகர விற்பனைக் குழுவின் உறுப்பினர்கள் சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை சென்னை மாநகராட்சி ஆணையரால் பரிந்துரைக்கப்படுவார்கள்" | 1 |
| 7 | அரசு சாரா அமைப்பு மற்றும் சமூகம் சார்ந்த அமைப்பு பிரதிநிதிகள் | | 2 |
| 8 | குடியிருப்போர் நல சங்கங்களின் பிரதிநிதி | | 1 |

மேற்படி 2015 ஆம் ஆண்டு விதிகளின் விதி 12(1) இன்படி, உள்ளாட்சி அதிகார வரம்பிற்குட்பட்ட ஒவ்வொரு மண்டலத்திற்கும், அந்தப் பகுதியின் சாலையோர வியாபாரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நகர விற்பனைக் குழுவின் ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | வகைப்பாடு | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், பழங்குடியினர் (SC/ST) | ஒன்று |
| 2 | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) | ஒன்று |
| 3 | சிறுபான்மையினர் (Minority) | ஒன்று |
| 4 | மாற்றுத் திறனாளிகள் (Person with Disabilities) | ஒன்று |
| 5 | மகளிர் (Women) | ஒன்று |
| 6 | பொது வகுப்பினர் (General) | ஒன்று |
| | மொத்தம் | ஆறு |

வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்களில் முதுநிலை வருவாய் அலுவலர் / தேர்தல் நடத்தும் அதிகாரியினால் இலவசமாக வழங்கப்படும் படிவம்-D-யினைப் பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

| மண்டலம் | மண்டல அலுவலக முகவரி |
|---|---|
| 1 | எண்.945, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை-19 |
| 2 | எண்.1, காமராஜர் சாலை, மணலி, சென்னை-68 |
| 3 | எண்.1, தட்டாங்குளம் ரோடு, மாதவரம், சென்னை-60 |
| 4 | எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, சென்னை-21 |
| 5 | எண்.62, பேசின் பிரிட்ஜ் ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-21 |
| 6 | எண்.158, ஸ்டராஹன்ஸ் ரோடு, பட்டாளம், சென்னை-12 |
| 7 | எண்.536, CTH ரோடு, டன்லப் எதிரில், அம்பத்தூர், சென்னை-53 |
| 8 | கதவு எண்.36B, 2-வது குறுக்கு தெரு, புல்லா அவென்யூ, ஷெனாய் நகர், சென்னை-30 |
| 9 | எண்.4, 4-வது குறுக்கு தெரு, லேக் வியூ ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 34 |
| 10 | எண்.64, N.S.K. சாலை, கோடம்பாக்கம், சென்னை-24 |
| 11 | எண்.123, ஆற்காடு ரோடு, வளசரவாக்கம், சென்னை-87 |
| 12 | எண்.121, நாசி ரெட்டி தோட்டம், திரு.வி.க. தொழிற்பேட்டை, சிட்கோ, சைதாப்பேட்டை, சென்னை-96 |
| 13 | எண்.115, டாக்டர். முத்துலட்சுமி சாலை, அடையாறு, சென்னை-20 |
| 14 | எண்.6/64, புழுதிவாக்கம் மெயின் ரோடு, புழுதிவாக்கம், சென்னை-91 |
| 15 | எண்.120, ராஜீவ் காந்தி சாலை (OMR), சோழிங்கநல்லூர், சென்னை-119 |

வேட்பாளர்கள் முன்வைப்புத் தொகையாக ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ரொக்கம் (Cash) அல்லது வங்கி வரைவோலை (Bank Demand Draft) அல்லது பணவிடை (Pay Order) ஆக வேட்புமனுவுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும்.

வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு குறிப்பிடப்பட்ட நாள் மற்றும் நேரத்திற்கு முன்னதாகவோ அல்லது பின்னரோ பெறப்படும் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படும்.

**தேர்தலுக்கான அட்டவணை**

| வ.எண். | தேர்தல் நடைமுறைகள் | நாள் | நேரம் |
|---|---|---|---|
| 1 | வேட்பு மனு படிவம் வழங்குதல் (சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்களில் நியமிக்கப்பட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்படும்) | 16.6.2025 முதல் 18.6.2025 வரை | |
| 2 | வேட்பு மனு தாக்கல் செய்தல் | 18.06.2025 | காலை 10.00 முதல் மாலை 5.00 வரை |
| 3 | வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்தல் | 19.06.2025 | காலை 10.00 மணி |
| 4 | செல்லுபடியாகும் வேட்புமனுக்கள் பட்டியல் வெளியிடுதல் | 19.06.2025 | மாலை 5.00 மணி |
| 5 | வேட்புமனுக்கள் திரும்ப பெறுதல் | 20.06.2025 | காலை 10.00 முதல் மாலை 5.00 வரை |
| 6 | வேட்பாளர் இறுதி பட்டியல் வெளியிடுதல் | 20.06.2025 | மாலை 5.00 மணி |
| 7 | தேர்தல் நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 26.06.2025 | காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| 8 | தேர்தல் நடைபெறும் இடம் (சம்மந்தப்பட்ட மண்டல அலுவலக எல்லைக்குள்) | மண்டலம் 1 முதல் 15 வரை | |
| 9 | வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடம், நாள் மற்றும் நேரம் (வாக்கு எண்ணிக்கை முடிவுற்ற பின்னர் தேர்தல் முடிவு அறிவிக்கப்படும்) | 27.06.2025 காலை 9.00 மணி (சம்மந்தப்பட்ட மண்டல அலுவலக எல்லைக்குள்) | |

செ.ம.தொ.இ / 563 / வரைகலை / 2025

ஆணையருக்காக

THE HINDU
03 JUN 2025
DATE:

# GREATER CHENNAI CORPORATION
# REVENUE DEPARTMENT

R.D.C.No.SUSV/1008-28/2025

## NOTIFICATION

*(Under rule 12 (1) of the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Rules, 2015)*

In the Greater Chennai Corporation, to implement the Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Act, 2014 and Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Schems and Rules, 2015, as per the Government Order (4D) No.29, Municipal Administration & Water Supply (MC.2) Department, dated 07.08.2023 Street Vendors Town Vending Committee constituted under the Chairperson of the Commissioner, Greater Chennai Corporation with 14 members.

The Special Bench of the Hon'ble High Court of Madras, Dated 25-02-2025 and 02-04-2025 in W.P.Nos.14977 of 2024 and batch cases, ordered that as in Chennai City the areas whether can be treated Vending Zones or Non-vending Zones would take a larger time, to simplify the procedure as contemplated under Section 22(1) of the Act, directed the Government **to constitute a Town Vending Committee for each Zone**, as there are 15 zones available in the Chennai Corporation limit.

In order to comply the above order and in continuation of the Government order in G.O.(4D) No.23, Municipal Administration and Water Supply (MC.2) Department, Dated 16-05-2025 & Council Resolution No.641/2025, Dated 28-05-2025, notification is hereby issued to constitute 15 Town Vending Committees one each for the Zone under the Chairperson of Regional Deputy Commissioner concerned.

### TOWN VENDING COMMITTEE

| Sl.No | Chairperson/Member | Details | No. |
|---|---|---|---|
| 1 | Chairperson | Regional Deputy Commissioner concerned | 1 |
| 2 | A Medical Officer of the Local Authority | Zonal Health Officer | 1 |
| 3 | Police Officers including Police in-charge of Traffic | Assistant Commissioner of Police (Law & Order)<br>Assistant Commissioner of Police(Traffic) | 2 |
| 4 | An Officer from the Local Authority concerned | Zonal Executive Engineer (Senior) | 1 |
| 5 | Representatives of Street Vendors | As per Rules 12 & 13 of the Rules, 2015 to be elected through election. | 6 |
| 6 | Representatives of Traders Association | As per the Rule 11 (3) of the Tamil Nadu Street Vendors (Protection of Livelihood and Regulation of Street Vending) Rules, 2015, "The members of the Town Vending Committee, except the members elected from the street vendors shall be nominated by the Commissioner of Corporation of Chennai in respect of Corporation of Chennai" | 1 |
| 7 | Representatives of Non-Governmental and Community based Organizations | | 2 |
| 8 | Representatives of Resident Welfare Association | | 1 |

As per the Rule 12(1) of the Rules, 2015 it is notified that the election will be conducted for electing the six members of a Town Vending Committee representating the street vendors of the area for each Zone under the jurisdiction of the local authority.

| S.No | Category | No. of Members to be elected |
|---|---|---|
| 1. | Scheduled Caste, Scheduled Tribe | One |
| 2. | Other Backward Classes | One |
| 3. | Minorities | One |
| 4. | Person with Disabilities | One |
| 5. | Women | One |
| 6. | General | One |
| | Total | Six |

The nomination of the candidates for election shall be made in Form-D in the concerned zone which shall be supplied by the Senior Revenue Officer/ Returning Officer at free of cost.

| Zone | Address of the Zonal Office |
|---|---|
| 1 | No.945, Thiruvotriyur High Road, Chennai-600019 |
| 2 | No.1, Kamarajar Salai, Manali, Chennai-600 068 |
| 3 | Bazaar Road, Madhavaram, Chennai-600060 |
| 4 | No.266,Thiruvotriyur High Road, Chennai-600021 |
| 5 | No.62, Basin Bridge Road, Old Washermenpet,Chennai-600021 |
| 6 | No.158, Strahans Road, Pattalam, Chennai - 600 012. |
| 7 | No.536, C.T.H. Road, Opp Dunlop, Chennai - 600053. |
| 8 | Door No.36B, 2nd Cross Street, Pulla Avenue, Shenoy Nagar, Chennai- 600030. |
| 9 | No.4,4th Cross Street, Lakeview Road, Chennai - 600034. |
| 10 | No.64, NSK Salai, Kodambakkam, Chennai - 600024. |
| 11 | No.123, Arcot Road, Valasaravakkam, Chennai – 600087 |
| 12 | No.121, Nagi Reddy Garden, Thiru.Vi.Ka Industrial Estate, SIDCO, Saidapet, Chennai - 96 |
| 13 | No:115, Dr.Muthulakshmi Salai, Adyar, Chennai-600020 |
| 14 | No.6/64, Puzhuthiwakkam Main Road, Chennai – 600091. |
| 15 | No.120,Rajiv Gandhi Salai (OMR), Sholinganallur, Chennai-600119 |

The candidates shall make a Security Deposit of Rs.2,000/- (Rupees two thousand only) by cash or Demand Draft or Pay Order along with the nomination paper.

Any nomination papers which are not received within the stipulated date, time for its receipt shall be rejected.

### ELECTION SCHEDULE

| S.No. | Election Process | Date | Time |
|---|---|---|---|
| 1 | Issue of Nomination Forms (will be issued by the concerned Senior Revenue Officer/Returning Officer) | From 16.6.2025 to 18.6.2025 | |
| 2 | Receipt of Nomination | 18.06.2025 | 10.00 am to 5.00 pm |
| 3 | Date of Scrutiny of Nomination | 19.06.2025 | 10.00 am |
| 4 | Date of Publication of valid Nomination | 19.06.2025 | 5.00 p.m |
| 5 | Date of withdrawal of candidature | 20.06.2025 | 10.00 am to 5.00 pm |
| 6 | Date of Publication of final candidature | 20.06.2025 | 5.00 p.m |
| 7 | Date and Time of Poll | 26.06.2025 | 9.00 am to 5.00 pm |
| 8 | Place of Polling Station | Zone 1 to 15 (Jurisdiction of the zones concerned) | |
| 9 | Place, Date and Time of Counting (After completing the counting result will be declared) | 27.06.2025 at 9.00 am ( Zone 1 to 15 Jurisdiction of the zones concerned) | |

DIPR / 563 / Display / 2025 **for Commissioner**

...resh Nambath (Responsible for selection of news under the PRP Act).